ஆராய்ச்சி படிப்பை தொடர

# 120 மாணவ, மாணவிகளுக்கு மாதம் ₹25,000 ஊக்கத்தொகை

**முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்**

**சென்னை, ஆக.23:** தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகைத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவிகளுக்கு மாதம் ₹25,000/- ஊக்கத் தொகை பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியருடைய ஆராய்ச்சி திறனையும், புதிய கண்டுபிடிப்புகளையும் ஊக்கப்படுத்திடும் வகையில், முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை திட்டத்தில் பயன்பெற்றிட ஆராய்ச்சி மாணவர்களை தெரிவு செய்வதற்காக ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தகுதித் தேர்வு 10.12.2023 அன்று நடத்தப்பட்டு, 120 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களில் 60 மாணவர்கள் அறிவியல் பாடப் பிரிவையும், 60 மாணவர்கள் கலை, மானுடவியல் மற்றும் சமூகவியல் பாடப் பிரிவையும் சார்ந்தவர்கள் ஆவர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்கள் தங்கள் ஆராய்ச்சி படிப்பினை அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொடர மாதம் ₹25,000 ஊக்கத் தொகையாக மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 12.31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை தொடங்கி வைக்கும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர், தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவியர்களில் 10 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத்தொகை திட்டத்திற்கான ஆணைகளை நேற்று வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, தலைமைச் செயலாளர் முருகானந்தம், உயர்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கல்லூரி கல்வி இயக்குநர் கார்மேகம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

சத்துணவு மையங்களுக்கு

# முட்டை உரிக்க நவீன இயந்திரம் கொள்முதல் செய்ய திட்டம்

**அரசிடம் அனுமதி கோரியது சமூகநலன்துறை**

**சென்னை, ஆக.23:** சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர்கள், உதவியாளர்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு, அதிக பயனாளிகளை கொண்ட சத்துணவு மையங்களுக்கு முட்டை உரிப்பதற்கான நவீன இயந்திரம் கொள்முதல் செய்ய சமூகநலன் துறை திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக, தமிழகத்தில் 451 பள்ளி சத்துணவு மையங்களில் 500 பயனாளிகளுக்கு மேல் உள்ளனர். இந்த மையங்களை சேர்ந்த பணியாளர்கள் தினமும் 500 முட்டைகளுக்கு மேல் வேக வைத்து உரிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். சில நேரங்களில், மாணவர்களுக்கான முட்டைகள் உடைந்து வீணாகி விடுகின்றன. சுகாதாரத்தையும் உறுதி செய்ய வேண்டிய சூழல் உள்ளது.

இதன் காரணமாக, அதிக பயனாளிகளை கொண்ட 431 பள்ளி சத்துணவு மையங்களுக்கு நவீன முட்டை உரிக்கும் இயந்திரம் வாங்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்காக, நிதி ஒதுக்கீடு செய்து இயந்திரம் கொள்முதல் செய்ய அனுமதி கோரி தமிழக அரசிடம் சமூக நலத்துறை சார்பில் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. விரைவில், இதற்கான அனுமதி கிடைத்துவிடும். அதன்பிறகு, டெண்டர் விடப்பட்டு, முட்டை உரிக்கும் இயந்திரம் சத்துணவு மையங்களில் பயன்பாட்டுக்கு வந்துவிடும்.

பாப்பிரெட்டிப்பட்டி அருகே

# கோயில் திருவிழாவில் அன்னதானம் வழங்க இளம்பெண்ணுக்கு எதிர்ப்பு

**அதிகாரிகள் சமரசம்**

**பாப்பிரெட்டிப்பட்டி, ஆக.23:** பாப்பிரெட்டிப்பட்டி அருகே, கோயில் திருவிழாவில், பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க வந்த இளம் பெண்ணை, ஒரு தரப்பினர் தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. தகவலறிந்து வந்த தாசில்தார், டிஎஸ்பி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்தனர்.

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அடுத்த இருளப்பட்டி கிராமத்தில் உள்ள காணியம்மன் கோயிலில், ஆண்டுதோறும் ஆவணி மாதம் முதல் வாரம் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. அறநிலையத்துறை சார்பில் 5 ஊராட்சிகளை சேர்ந்த பொதுமக்கள், இந்த விழாவை நடத்தி வருகின்றனர். நடப்பாண்டு கோயில் தேர்த்திருவிழா தொடர்பாக, அரூர் ஆர்டிஓ வில்சன் ராஜசேகர் தலைமையில், கடந்த 15ம்தேதி ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு சமுதாயத்தினர் திருவிழாவில் பூஜைகள், அன்னதானம் வழங்குவது, வாண வேடிக்கை, கரகாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகளை நடத்திக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டு, அதற்கு அனைத்து தரப்பினரும் ஒப்புதல் வழங்கினர்.

இந்த நிலையில், இருளப்பட்டியை சேர்ந்த அனிதா (30) என்பவர், கடந்த 19ம் தேதி, கோயிலில் அன்னதானம் வழங்குவதற்காக உறவினர்களுடன் வந்தார். சேலத்தில் உள்ள பொதுத்துறை வங்கியில் அலுவலராக பணியாற்றி வரும் இவருக்கு கடந்த 5 வருடங்களுக்கு முன்பு, கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையை சேர்ந்த சுகனவிலாசம்(34) என்பவருடன் திருமணமாகி, 3 வயது பெண் குழந்தை உள்ளது. தற்போது 7மாத கர்ப்பிணியாக உள்ள அனிதா, அன்னதானம் செய்வதற்கான மளிகை பொருட்களுடன் வந்த போது, அன்றைய தினம் கோயிலில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு, மற்றொரு சமுதாயத்தினருக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது. இதனால், அந்த சமுதாயத்தினர், இன்று கோயிலில் அன்னதானம் செய்யக்கூடாது, உங்களுக்கென ஒதுக்கப்பட்ட நாள் முடிந்து விட்டது என அனிதாவை தடுத்துள்ளனர். மேலும், கோயில் மண்டபத்துக்குள் அனிதா தரப்பினரை செல்ல விடவில்லை. இதனால் அவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதுகுறித்து தகவல் அறிந்த அரூர் டிஎஸ்பி ஜெகநாதன், பாப்பிரெட்டிப்பட்டி தாசில்தார் வள்ளி ஆகியோர், விசாரணை மேற்கொண்டனர். அப்போது, குழந்தை பாக்கியம் வேண்டி, காணியம்மன் கோயிலில் வேண்டுதல் வைத்துள்ளேன். நேர்த்திக் கடனை செலுத்த வந்த என்னை தடுத்து, அவமானப்படுத்துகின்றனர். மளிகை பொருட்களுடன் வந்த என்னை சமையல் செய்ய விடாமல் தடுத்து விட்டனர் என புகார் தெரிவித்தார். அதற்கு மற்ற சமூகத்தினர், அவர்களுக்கென ஏற்கனவே நாள் ஒதுக்கி, அவர்கள் பூஜை மற்றும் அன்னதானம் பணிகளை செய்து முடித்து விட்டனர். தற்போது அடுத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நாளில், வந்து தகராறு செய்கிறார் என முறையிட்டனர்.

இதையடுத்து தாசில்தார் வள்ளி, 'இது அறநிலையத்துறைக்கு சொந்தமான கோயில். யாரும், யாரையும் தடுக்க முடியாது. தெரிந்தோ, தெரியாமலோ வந்து விட்ட அவர்களை தடை செய்யாதீர்கள். அன்னதானம் செய்து விட்டு செல்லட்டும். மீறி தடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார். இதையடுத்து, அவர்கள் அமைதியாக கலைந்து சென்றனர். இதையடுத்து அனிதா தரப்பினர், கோயில் மண்டபத்தில் சமையல் செய்து, பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளுக்கான

# சிறப்பு பிரிவு கலந்தாய்வு இடங்கள் நிரம்பின

**சென்னை, ஆக. 22:** எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளில் சேருவதற்கான சிறப்பு பிரிவு கலந்தாய்வில் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டன.

தமிழகத்தில் உள்ள மருத்துவ கல்லூரிகளில் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளில் மாணவர்கள் சேர பொதுப் பிரிவு கலந்தாய்வு நேற்று முன் தினம் ஆன்லைனில் தொடங்கியது. இந்த பொது பிரிவு கலந்தாய்வு ஆகஸ்ட் 28ம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்த நிலையில் ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளில் சேருவதற்கான சிறப்பு பிரிவு கலந்தாய்வு நேற்று நடைபெற்றது. 7.5% உள் ஒதுக்கீட்டில் வரும் அரசு பள்ளி மாணவர்கள், முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகள், மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு பிரிவு மாணவர்கள் உள்ளிட்டோர் இந்த சிறப்பு கலந்தாய்வில் கலந்து கொண்டனர்.

மொத்தம் உள்ள 866 மருத்துவ இடங்களுக்கு 1200 மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 2020ம் ஆண்டு முதல் 7.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இட ஒதுக்கீட்டில் இந்த ஆண்டு 624 இடங்கள் இருந்தது. அதில் எம்பிபிஎஸ் படிப்பிற்கு 496 இடங்களும், பிடிஎஸ் படிப்பிற்கு 128 இடங்களும் நிரப்பப்பட்டது. அதேபோல, மாற்றுத்திறனாளி பிரிவில் எம்பிபிஎஸ் படிப்பிற்கு 212 இடங்களும். பிடிஎஸ் படிப்பிற்கு 11 இடங்களும் நிரப்பப்பட்டது. இதற்கு 133 மாணவர்கள் மட்டுமே தகுதிப்பெற்று இருந்ததால் மீதி இடங்கள் பொதுப்பிரிவிற்கு மாற்றப்பட்டது. முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகளுக்கு எம்பிபிஎஸ் படிப்பிற்கு 10 இடங்களும், பிடிஎஸ் படிப்பிற்கு 1 இடமும், விளையாட்டுப் பிரிவில் எம்பிபிஎஸ் படிப்பிற்கு 7 இடங்களும், பிடிஎஸ் படிப்பிற்கு 1 இடமும் நிரப்பப்பட்டது.

கலந்தாய்வு முடிந்து கல்லூரிகளை தேர்வு செய்த மாணவர்களுக்கு 29ம் தேதி தற்காலிக ஒதுக்கீடு ஆணையும், 30ம் தேதி மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான இறுதி ஒதுக்கீட்டு ஆணையும் வழங்கப்படும்.

இந்த நிலையில் அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% உள் ஒதுக்கீடு, சிறப்பு பிரிவு மாணவர்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று வழங்கினார்.

▶ சென்னை ஓமந்தூரார் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நேற்று நடந்த எம்பிபிஎஸ், பல் மருத்துவ படிப்புகளுக்கு அரசுப்பள்ளி மாணவர்களுக்கான 7.5% உள் ஒதுக்கீடு மற்றும் சிறப்பு பிரிவு மாணவர்களுக்கான ஒதுக்கீட்டு ஆணையை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். அருகில் மருத்துவக் கல்வி இயக்குனர் சங்குமணி, தேர்வுக்குழு செயலாளர் அருணாலதா, ஓமந்தூரார் மருத்துவமனை இயக்குனர் மணி மற்றும் மருத்துவத்துறை அதிகாரிகள் உள்ளனர்.

## மகப்பேறு மருத்துவராவதே இலக்கு, 7.5% இடஒதுக்கீட்டில் முதலிடம் பிடித்த ரூபிகா பேட்டி

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள அரசு பள்ளியில் 12ம் வகுப்பு வரை படித்து முடித்தேன். அதற்கு பிறகு முதல்முறையாக நீட் தேர்வு எழுதினேன். அதில் பெற்ற மதிப்பெண் குறைவாக இருந்தால் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. பிறகு சைதாப்பேட்டையில் உள்ள அரசு நடத்தும் பயிற்சி மையத்தில் சேர்ந்து கடந்த ஒரு வருடமாக தீவிரமாக படித்தேன். இதன் விளைவாக 669 மதிப்பெண்கள் பெற்றேன். அரசு பள்ளியில் படித்ததால் 7.5 சதவீத அரசு இட ஒதுக்கீட்டில் சென்னை மருத்துவக் கல்லூரியை தேர்வு செய்துள்ளேன். நான் வசிக்கும் கிராமத்தில் பெரிய வசதிகள் எதுவும் இல்லை. அதனால் மகப்பேறு மருத்துவர் ஆக வேண்டும் என்பது என்னுடைய எண்ணமாக உள்ளது. என் தந்தை மேஸ்திரி பணிதான் செய்து வருகிறார். என்னைப் போன்ற ஏழை எளிய மாணவர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடு மிகவும் உதவியாக உள்ளது. இதற்காக தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

பள்ளி கல்வித்துறை சார்பில்

# மன்ற போட்டிகளில் வென்ற மாணவர்கள் ஹாங்காங் பயணம்

**சென்னை, ஆக.23:** பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாநில அளவிலான மன்றப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் ஹாங்காங் கல்வி சுற்றுலா சென்றுள்ளனர்.

2022-23ம் கல்வி ஆண்டில் அரசு நடுநிலை, உயர் நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 6 முதல் 9ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடந்த 4 மன்ற போட்டிகளில், ஒவ்வொரு மன்றத்திற்கும் 25 பேர் வீதம் வெற்றியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2023-24ல் அரசு நடுநிலை பள்ளி, உயர் நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9 வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி அளவில் மன்ற செயல்பாடுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட அளவிலான மன்றப் போட்டிகள் பிப்ரவரி மாதம் நடத்தப்பட்டது. மாநில அளவிலான மன்ற போட்டிகள் மார்ச் மாதம் நடந்தது. தற்போது முதற்கட்டமாக மாநில அளவில் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களில் 20 மாணவர்கள், தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியை ஒருவரும் மற்றும் அலுவலர் ஒருவரும் நேற்று ஹாங்காங் கல்விச் சுற்றுலா சென்றுள்ளனர்.

அமலாக்கத்துறை வழக்கில் முக்கிய சாட்சியான

# வங்கி மேலாளரிடம் செந்தில்பாலாஜி தரப்பு குறுக்கு விசாரணை

**அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை தள்ளிவைப்பு**

**சென்னை, ஆக. 23:** சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி நீதிமன்ற காவலில் சிறையில் உள்ளார். இந்த வழக்கில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் செந்தில் பாலாஜிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ஒரு ஆண்டுக்கு பிறகு கடந்த 8ம் தேதி செந்தில் பாலாஜிக்கு எதிராக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு சாட்சி விசாரணை தொடங்கியது. இந்நிலையில் சாட்சிகளின் விசாரணை சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.அல்லி முன்பு நடந்து வருகிறது. வழக்கில் சிட்டி யூனியன் வங்கியின் கரூர் கிளையின் தலைமை மேலாளராக பணியாற்றிய ஹரிஷ்குமார் கடந்த வாரம் சாட்சியம் அளித்தார்.

அவரிடம் செந்தில் பாலாஜி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கவுதமன், குறுக்கு விசாரணை செய்தார். செந்தில் பாலாஜி மற்றும் அவரது மனைவி மேகலா, சகோதரர் அசோக்குமாரின் வங்கி கணக்குகள் தொடர்பான விவரங்களை சாட்சி கூண்டில் நின்றவாறு ஹரிஷ்குமார் பதிலளித்தார்.

வங்கியின் ஆவணங்கள், கவரிங் லெட்டர் தொடர்பாகவும் பல்வேறு கேள்விகள் செந்தில் பாலாஜி தரப்பில் குறுக்கு விசாரணையின் கேட்கப்பட்டது. குறுக்கு விசாரணை நேற்று நிறைவடையாததால் வழக்கை வரும் 28ம் தேதிக்கு நீதிபதி அல்லி தள்ளிவைத்தார்.

இதனிடையே, செந்தில் பாலாஜி நீதிமன்ற காவலை வரும் 28ம் தேதி வரை நீட்டித்து நீதிபதி அல்லி உத்தரவிட்டார்.

போலி நீதிமன்ற ஆணை தயாரிப்பு

# 3 பேருக்கு தலா 6 மாதம் சிறை

**சென்னை ஐகோர்ட் உத்தரவு**

**சென்னை, ஆக. 23:** போலி உயர் நீதிமன்ற உத்தரவை தயாரித்த 3 பேருக்கு தலா 6 மாதங்கள் சிறை தண்டனை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் ஜே.கே.கே.ரங்கம்மாள் அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்தில் அமல்ராஜ், சண்முகம் மற்றும் முருகானந்தம் ஆகியோர் வசித்து வந்துள்ளனர். இடத்தை காலி செய்யக் கூறியும் காலி செய்யாததால், அறக்கட்டளை நிர்வாகி செந்தாமரை, நாமக்கல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

வழக்கின் உத்தரவு தனக்கு சாதகமாக வந்ததை அடுத்து, நீதிமன்ற ஊழியர்களுடன் மூவரையும் காலி செய்வதற்கு சென்றுள்ளார். அப்போது, காலி செய்யும் உத்தரவுக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் தடை வாங்கியுள்ளதாக கூறி அதற்கான நகலை முருகானந்தம் கொடுத்துள்ளார். ஆனால் இது போன்ற எந்த உத்தரவும் நீதிமன்றத்தில் பெறவில்லை, இந்த உத்தரவு போலியானது எனவும் செந்தாமரை சார்பில் நாமக்கல் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. மேலும், சென்னை உயர் நீதிமன்ற பதிவாளரிடமும் புகார் அளிக்கப்பட்டது.

உயர் நீதிமன்ற உத்தரவு நகலை போலியாக தயாரித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி செந்தாமரை சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த தனி நீதிபதி, இந்த விவகாரம் தொடர்பாக தாமாக முன்வந்து குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எடுக்கலாம் என இரு நீதிபதிகள் அமர்வுக்கு கடந்த 2018ம் ஆண்டு பரிந்துரைத்தார். இதனையடுத்து, கடந்த 2022ம் ஆண்டு அமல்ராஜ், சண்முகம், முருகானந்தம் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக தாமாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக சிறப்புக் குழுவை அமைத்து விசாரிக்க டிஜிபிக்கு உயர் நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து, விசாரணையை சிபிசிஐடிக்கு மாற்றி டிஜிபி உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், வி.சிவஞானம் அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 7 பேரில் இரண்டு பேர் உயிரிழந்ததாலும், மீதம் இருவர் மீதான புகாருக்கு முகாந்திரம் இல்லை எனக்கூறி அவர்களை நீதிபதிகள் விடுவித்தனர். அமல்ராஜ், சண்முகம், முருகானந்தம் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறி, மூவருக்கு தலா 6 மாதம் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். இதனையடுத்து, உடனடியாக மூவரையும் புழல் சிறையில் அடைக்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மகளிர் குழு தலைவி தற்கொலை விவகாரம்

# கந்துவட்டி கேட்டு மிரட்டிய பெண்ணுக்கு போலீஸ் வலை

**பள்ளிபாளையம், ஆக.23:** பள்ளிபாளையம் அருகே மகளிர் குழு தலைவியின் தற்கொலைக்கு காரணமான கந்து வட்டி கேட்டு மிரட்டிய பெண்ணை போலீசார் தேடி வருகின்றனர்.

▶ சுஜாதா.

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் அடுத்துள்ள ஓடப்பள்ளியை சேர்ந்தவர் சுஜாதா(38). மகளிர் சுயஉதவி குழு தலைவியாக இருந்த இவர், தனது குழு உறுப்பினர்கள் பலருக்கு மைக்ரோ பைனான்ஸ் மூலம் கடன் வாங்கி கொடுத்துள்ளார். இதில் சில பெண்கள் கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை. உறுப்பினர்கள் வாங்கிய கடனுக்கு குழுத்தலைவியான சுஜாதாவே பொறுப்பு என, மைக்ரோ பைனான்ஸ் மேலாளர்கள் கூறியுள்ளனர். இதனால் உறுப்பினர்களின் கடன் தொகையை, சுஜாதா கந்து வட்டிக்கு கடன் வாங்கி செலுத்தியுள்ளார். இதில் ஓடப்பள்ளியை சேர்ந்த கந்து வட்டிக்கு பணம் கொடுக்கும் கவிதாவிடம் வாங்கிய ₹30 ஆயிரத்திற்கு, சுமார் ₹60 ஆயிரம் வரை வட்டி கட்டியுள்ளார். இதனிடையே, வட்டியாக ₹20 ஆயிரமும், அசல் தொகையும் கேட்டு, கிராம மக்கள் முன்னிலையில், கவிதா அவமானப்படுத்தியுள்ளார். இதனால் மனமுடைந்த சுஜாதா கடந்த 20ம்தேதி இரவு, தனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை செய்யும் முன்பு, அவர் தனது செல்போனில் ஒரு வீடியோ பதிவு செய்துள்ளார். இதில் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தை சேர்ந்த மேலாளர்கள் சக்திவேல், துரைராஜ் ஆகியோர் ஆபாசமான வார்த்தைகளால் திட்டுகிறார்கள். குழு உறுப்பினர்கள் கட்டாத பணத்தை நான் தான் கட்ட வேண்டுமென மிரட்டுகிறார்கள். உறுப்பினர்கள் பலர் ஊரை விட்டு ஓடி விட்டதால், சுமார் ₹1.50 லட்சம் வரை கடன் வாங்கி கட்டியுள்ளேன். கவிதாவிடம் ₹30 ஆயிரம் வாங்கி, ₹60 ஆயிரம் வட்டி கட்டினேன். மேலும் ₹20 ஆயிரம் வட்டி கட்ட வேண்டுமென மிரட்டி அவமானப்படுத்தினார். மேலும், எனது மகன், கணவரையும் மிரட்டி அவமானப்படுத்துகிறார். எனக்கு ஏதேனும் நடந்தால், அதற்கு இவர்கள் தான் பொறுப்பு என வீடியோவில் சுஜாதா பதிவு செய்துள்ளார்.

சுஜாதா பதிவு செய்துள்ளவாக்கு மூலத்தின்படி, போலீசார் கவிதா மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். அவரை தேடி வீட்டிற்கு சென்றபோது, அவர் தலைமறைவாகி விட்டது தெரியவந்தது. அவரை போலீசார் தேடி வருகின்றனர். இதுகுறித்து மாவட்ட எஸ்பி ராஜேஸ் கண்ணன் விசாரணை நடத்தி வருகிறார்.

கடந்த கால தொழில் முதலீடுகள் குறித்து

# தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்

**அன்புமணி வேண்டுகோள்**

**சென்னை, ஆக.23:** பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான குழுவினர் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கான தேவை, வேலைவாய்ப்புகள் உருவாக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தொழில் முதலீடு ஈர்க்கப்பட வேண்டியதும், அதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதும் தவிர்க்க முடியாதவை.

அதே நேரத்தில் கடந்த காலங்களில் முதலீடுகளை ஈர்க்க செய்யப்பட்ட முயற்சிகளின் நிலை என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும். கடந்த 3 ஆண்டுகளில் ஈர்க்கப்பட்டதாக கூறப்படும் ₹9.74 லட்சம் கோடி தொழில் முதலீடுகள் விவரங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம்-8** ம.அ.8.ந.க.எண்:இ1/7658/B/2023

**மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.**

**எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி**

மண்டலம்-8, பகுதி-23, வார்டு-108, சுப்பராயன் தெருவில் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டிடம் கட்டும் பணி

**மொத்த பணியின் உத்தேச தொகை ரூ.100.96 லட்சம் முன்வைப்பு தொகை 1% ரூ. 1.00.960/-**

மேலும் விவரங்களுக்கு **https://www.tntenders.gov.in** மற்றும் **https://www.chennaicorporation.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம்: **05.09.2024** அன்று மாலை **3.00** மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: **06.09.2024** அன்று மாலை **3.30** மணி வரை

செ.ம.தொ.இ/3231/ஒப்பந்தப்புள்ளி/2024 **மண்டல அலுவலர் / ம-8**



**pnb Housing Finance Limited** Ghar Ki Baat

**பிற்சேர்க்கை-IV-A**
**அசையாச் சொத்து/கள் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு**
பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு.

பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசி: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com
ஈரோடு கிளை: 139, URT டவர், முதல் தளம், பெருந்துறை சாலை, ஈரோடு-638011, சேலம் கிளை: 104/7, சேலம் புரட்சிவிட்டி கவுன்சில், எஸ்பிபி பவன், மணிவண்ணன் தெரு, புதிய பஸ்நிலையம் எதிரில் சேலம்-636 004

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் நிரல் எண்-A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பிஎன்பி எச்எப்எல்)/ கடனீட்டு கடனீந்தோரின் அதிகாரியால் ஆக்கப்பூர்வகையக சுவாதீனம் (நிரல் எண்- C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்-D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது.
நாளது தேதிய திருத்தப்படாத கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி-8(6) & 9 கீழ் நிரல் எண்-A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்) மற்றும் கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்புர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றும் அதிகாரதாரர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பிஎன்பிஎச்எப்எல்), கடனீட்டு கடனீந்தோர் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

| கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A) | கோரப்பட்ட தொகை & நாள் (B) | சுவாதீனம் தன்மை (C) | அடமானச் சொத்துகள் விவரம் (D) | நிர்ணய விலை (RP) (E) | முன்வைப்புத் தொகை(நிர்ணய விலையில் 10%) (F) | ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நா